


**30. 03. 2026**

தலைப்புச் செய்திகள்

1. உலகளாவிய நெருக்கடியிலும் இந்தியாவின் அடிப்படை பொருளாதாரம் வலுவாக உள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. மாநிலங்களவையிலிருந்து எதிர்கட்சி உறுப்பினர்கள் இன்று வெளி நடப்பு செய்தனர்.

3. திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு. க. ஸ்டாலின் கொளத்தூரில் இன்று வேட்புமனு தாக்கல் செய்தார். தேர்தல் பிரச்சாரத்தையும் அவர் தொடங்கியுள்ளார்.

4. வேட்பு மனு தாக்கல் செய்ய வேட்பாளர் உட்பட 5 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

5. I.P.L. 20 - 20 கிரிக்கெட் போட்டியில் குவ்ஹாட்டியில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் – ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

***************

சீதாராமன்

வாடிக்கையாளர் தரவுகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் வலுவான சட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பை வங்கிகள்

நடைமுறைபடுத்துவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், பாரத ஸ்டேட் வங்கி சட்டம், வங்கி கம்பெனி சட்டம், பிராந்திய ஊரக வங்கிகள் சட்டம், கடன் சார்ந்த தகவல்கள் மற்றும் கம்பெனி சட்டம், பொது நிதி நிறுவனங்கள் சட்டம் ஆகிய 5 சட்டங்களை வங்கிகள் பின்பற்றுவதாக சுட்டிக்காட்டினார்.

தேவையின் அடிப்படையில் மட்டுமே தரவுகள் பெறப்பட்டு உரிய அதிகாரிகளிடம் பகிரப்படுவதாகவும், அமைச்சர் குறிப்பிட்டார்.

முறைகேடுகளோ அல்லது அங்கீகாரம் இல்லாமல் தகவல்கள் பரிமாறப்பட்டாலோ ரிசர்வ் வங்கியிடம் புகார் தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

மற்றொரு கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் நம் நாட்டின் பொருளாதாரம் வலுவாக இருப்பதாகவும், ரூபாயின் மதிப்பு சந்தை அடிப்படையிலான என்றும் உலகளாவிய நெருக்கடியிலும் இந்தியாவின் அடிப்படை பொருளாதாரம் வலிமையாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மத்திய அரசும், நிதி துறை அதிகாரிகளும் நிலமையை உன்னிப்பாக கவனித்து நாட்டு மக்களின் நலன்களை பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக குறிப்பிட்டார்.

***************

ஜே.பி.நட்டா

இஸ்லாமிய சமூகத்தினரை முதன்மையான வாக்கு வங்கியாக கொண்டு காங்கிரசும் I.N.D.I.A அமைப்பும் செயல்படுவதாக மாநிலங்களவை முன்னவரும், மத்திய அமைச்சருமான திரு.ஜே.பி.நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர் அரசியல் சாசன அமைப்பின் மீது எவ்வித மதிப்பும்,

ஆக்கப்பூர்வமான விவாதத்தில் விருப்பமும் எதிர்கட்சிகளுக்கு இல்லை என்று குறைகூறினார்.

முன்னதாக பிஜேபி உறுப்பினர் திரு.லக்ஷ்மன், கர்நாடகம், மேற்குவங்கம், தெலங்கானா, தமிழ்நாடு, கேரளம் ஆகிய எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கான இட ஒதுக்கீடுகள் தவறாக பயன்படுத்துவதாக குறை கூறினார்.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்து குரல் எழுப்பிய எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

***************

மக்கள் தொகை கணக்கெடுப்பு

நாட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் வரும் ஒன்றாம் தேதிமுதல் தொடங்கும் என்று கணக்கெடுப்பு ஆணையரும் பதிவுத்துறை தலைவருமான திரு.மிருத்யுன்ஜே நாராயணன் குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், இரண்டு கட்டங்களாக கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

ஏப்ரல் தொடங்கி, செப்டம்பர் மாதம் வரை உள்ள காலத்தில் வீடுகள் கணக்கெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும்,

2 ஆவது கட்டமாக மக்கள் தொகையும் ஜாதி வாரியிலான கணக்கீடுகளும் இடம்பெறும் என்று குறிப்பிட்டார்.

மின்னணு தொழில்நுட்பம் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கைபேசி செயலி மூலம் தரவுகள் பெறப்படும் என்றார்.

சென்சஸ் 2027 செயல்பாடுகளின் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக வலை தொடர்பு சார்ந்த இணையதள சேவை ஏற்படுத்தப்படும் என்று கூறினார்.

16 மொழிகளில் சுய கணக்கீட்டு வசதி இணையதளத்தில் ஏற்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

நாடு சுதந்திரம் பெற்றபின் நடைபெறும் 16 ஆவது மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணி இது என்பது குறிப்பிடத்தக்கது.

***************

பிரச்சாரம் பிஜேபி காங்கிரஸ்

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி இன்று "எனது வாக்குச்சாவடி வலிமையான வாக்குச்சாவடி" இயக்கத்தின் கீழ் அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த பிஜேபி தொண்டர்களுடன் நமோ செயலி மூலமாக உரையாடுகிறார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும் எதிர்கட்சி தலைவருமான திரு.ராகுல்காந்தி கேரளம் மாநில பொதுக்கூட்டத்திலும் தெருமுனை கூட்டங்களில் வேட்பாளர்களுக்கு ஆதரவு கோருகிறார்.

***************

வேட்பு மனு தாக்கல்

தமிழகத்தின் 234 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும், மேற்குவங்கத்தில் 152 தொகுதிகளுக்கு முதற்கட்டமாகவும் வரும் 23ஆம் தேதி நடைபெறும் வாக்குப்பதிவிற்கான அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டதை அடுத்து வேட்புமனு தாக்கல் தொடங்கியது.

திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் கொளத்தூர் சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிட வேட்புமனுக்களை தாக்கல் செய்ததோடு தமது தேர்தல் பிரச்சாரத்தையும் தொடங்கினார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக அமோக வெற்றிபெறும் என்றும், அவர் தெரிவித்தார்.

பெரம்பூர் தொகுதியில் த.வெ.க தலைவர் திரு.விஜய் இன்று வேட்பு மனுக்களை தாக்கல் செய்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

தமிழகத்தில் திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு நிலமை சீர்கெட்டிருப்பதுடன் போதை பொருள் புழக்கமும் அதிகரித்திருப்பதாக திரு.விஜய் குறை கூறியுள்ளார்.

சோழிங்கர் சட்டமன்ற தொகுதியில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் அசோக்கும்,

கள்ளக்குறிச்சி தனி சட்டமன்ற தொகுதியில் அக்கட்சி வேட்பாளர் நாகம்மாலும்

பெரம்பலூரில் அக்கட்சியின் வேட்பாளர் ஜான்சிராணியும்,

குன்னத்தில் அக்கட்சி வேட்பாளர் கீர்த்திவாசனும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் போட்டியிட திமுக வேட்பாளர் திரு.மா.சுப்பிரமணியனும்,

திருச்சி மேற்கு தொகுதியில் திமுக வேட்பாளர் திரு.கே.என்.நேருவும், இன்று வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

மேட்டூர் சட்டமன்ற தொகுதியில் சுயேட்சையாக போட்டியிடும் டாக்டர் கே. பத்மராஜன் இன்று மனுக்களை தாக்கல் செய்தார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி தென்காசி மற்றும் தூத்துக்குடியில் இன்று தமது கட்சி மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

தமிழகத்தில் வேட்பு மனுக்களை வரும் 6ஆம் தேதி வரை தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வரும் 7 ஆம் தேதி மனுக்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

அவற்றை விலக்கி கொள்ள வரும் 9ஆம் தேதி கடைசி நாளாகும்.

அதனை தொடர்ந்து இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

***************

தேர்தல் ஆணையம்

இதனிடையே நெறிமுறைகளுக்கு ஏற்ப வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய மூன்று வாகனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், 100 மீட்டர் தூரத்திற்கு முன்பாக வாகனங்கள்

நிறுத்தப்பட்டு வேட்பாளர் உட்பட 5 பேர் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுவர் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

***************

கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வேளாண்துறை சார்பில், சிறு தானியங்களை கொண்டு, என் வாக்கு – என் உரிமை தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரம் இன்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் குமார் பார்வையிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

--- வாய்ஸ் ---

***************

சிவகங்கை

சிவகங்கை மாவட்டத்தில், சட்டப்பேரவை தேர்தலையொட்டி, நாளை நடைபெறும் பயிற்சி வகுப்பில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தவறாது பங்கேற்க வேண்டுமென, மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி.பொற்கொடி அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

---- வாய்ஸ் ---

***************

தேர்தல் இருவரி

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் மற்றும் செய்யூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக 100 மூன்றுசக்கர வாகனம் வட்டாச்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

***************

கடத்தல்

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அருகே மும்முனி புறவழிசாலையில் காவல்துறையினர் இன்று மேற்கொண்ட வாகன சோதனையின்போது இருசக்கர வாகனத்தில் கடத்தப்பட்ட 90 மது பாட்டில்கள் கைப்பற்றப்பட்டன.

இதுதொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டனர்.

***************

குண் டம்

ஈரோடு மாவட்டம் அருள்மிகு பண்ணாரி அம்மன் திருக்கோவில் குண்டம் திருவிழா இன்றும் நாளையும் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

வி ளையாட்டு

சத்தீஸ்கரில் நடைபெறும் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகளில் மயிலாடுதுறை மாவட்டம் பல்லவராயன் உண்டு உறைவிட பள்ளியில் பயின்ற 7 நரிக்குறவ இன மாணாக்கர் தேர்வாகியுள்ளனர்.

வரும் ஏப்ரல், 2, 3, 4 தேதிகளில் நடைபெறும் மலர்கம்பம் போட்டிகளில் தமிழ்நாடு அணி சார்பில் இம்மாணாக்கர் பங்கேற்க உள்ளனர்.

***************

வில்வித்தை

2025-ம் ஆண்டின் உலக வில்வித்தை பாரா போட்டிகளின் வீராங்கனையாக இந்தியாவின் ஷீத்தல் தேவி அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீரை சோந்த மாற்றுத்திறனாளியான 19 வயது ஷீத்தல் தேவி, தென்கொரியாவில் சென்ற ஆண்டு நடைபெற்ற, உலக காம்ப்வுண்ட்

தனி நபர் பேரா வில்வித்தை போட்டியில் தங்க பதக்கத்தை கைப்பற்றியதோடு, பல்வேறு போட்டிகளில் பல பதக்கங்களை குவித்தமைக்காக இந்த கவுரவம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

***************

கிரிக்கெட்

I.P.L. 20 - 20 கிரிக்கெட் போட்டியில் குவ்ஹாட்டியில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் – ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது